
வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
இறைவழிபாடு
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# தாயுமானவரின் இறைவழிபாடு

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே

1. தெய்வம் உண்டா?
2. தெய்வம் ஒன்றே
3. இறைவழிபாடு
4. அறநெறியே இறைவழிபாடு
5. உடலோம்பல் இறைவழிபாடு
6. நித்ய பூசை செய்வது இறைவழிவாடா?
7. இறைவழிபாடு எப்படி இருக்க வேண்டும்?
8. வழிபாட்டில் ஏழு படிகள்

## 1. தெய்வம் உண்டா?

மானுடம், வாழ்வியல் நெறிகளில் உயர்ந்திடும் பொருட்டு தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் வெளிப்படுத்திய கருத்துக்களே, தாயுமானவர் பாடல்களாகவும், ஞானக் களஞ்சியமாகவும், வேதாத்திரியமாகவும் கிடைத்துள்ளன.

வாழ்வியலுக்கு வேண்டிய அனைத்துக் கருத்துக்களின் பெட்டகமாக இவை திகழ்கின்றன. இவற்றுள் மனிதனைப் படைத்து அவனுள் உறையும் இறை குறித்து சிந்தனைகளும் மிகச் சிறப் பாக எ டு த்தச் சொல்லபட்டுள்ளது.

உலகில் மக்களைக் காக்கின்ற சக்தி ஒன்று உண்டு அல்லவா? அதுவே தெய்வம் என்று மக்கள் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும் என்பது சித்தர்களின் கருத்தாகும்.

"தெய்வநிலை மனிதரெலாம் உணர்ந்தால் அல்லால்
திருத்த முற வாழ்வேது? ஆற்றல் அற்றோர்
தெய்வம் உண்டு என நம்பி தினம் வணங்கித்
தேர்வுபெற மதம் கண்டோர் அறிவறிந்தோர்" (ஞாக.பா.498)

என்று குறிப்பிட்டு, தெய்வ நிலையினை மனிதர்கள் உணர்ந்தாலன்றி நல்ல திருத்தமுள்ள வாழ்க்கையினை வாழ்தல் இயலாது என்று அறதியிட்டு வேதாத்திரி மகரிஷி சொல்லுவார். மேலும் சொல்கிறார் அறிவின் முழுமைப் பேறு குறித்து,

"தெய்வ நிலை அறிந்தோர்கள் கோடி என்றால்,
தெளிவாக அறிவறிந்தோர் ஒருவராகும்
தெய்வநிலை அதனை வெளி, பிரம்மம் என்று
தேர்ந்த சில வார்த்தைகளால் விளக்கலாகும்
தெய்வமே உயிராகி. அறிவாய் ஆற்றும்
திருவிடையாடல் தன்னை, உணர்ந்து கொண்ட
தெய்வார்கள் அல்லால், மற்றோர் உயிரைப் பற்றித்
திருத்தமுடன் உரைப்போர் யார்? வாரீர். சொல்வேன்!"
(ஞாக.பா.1693)

எனவே தெய்வம் உண்டென்னும் கருத்தினை அனைவரும் அடைதல் வேண்டும் என்கிறார். பட்டினத்தாரும் "தெய்வம் உண்டென்றிரு" என்பார்.

தாயுமானவர் என்ன சொல்லுகிறார்?

தனது பாடல்களில், முதலில் சகுண பிரம்மத்தைப் பாடுகிறார். சகுண பிரம்மம் என்றால் – இறைவனைப் பற்றிய வர்ணணை.

தனது இஷ்ட தெய்வங்களைப் பாடுகிறார். சிவனை, உமையை, தெட்சிணாமூர்த்தியைப் பாடுகிறார்.

இரண்டாவதாக நிர்குண பிரம்மத்தைப் பாடுகிறார். நிர்குண பிரம்மம் என்றால் – இறைவன் அனைத்துமாக இருக்கிறார் என்பதாகும். இதனை அதிகமானப் பாடல்களில் பாடியுள்ளார்.

இறைவனைப் பற்றிய வர்ணனை வரும்போது மிகப் பல அடைகளோடு இறையின் இயல்புகளை எடுத்தியம்புகிறார்.

- துரிய நடுவுடிருந்த பெரிய பொருள் (பொருள்.8)
- பெரிய பூரணமாம் – நித்த நிர்மல சகித நிஷ்ப்ரபஞ்சப் பொருளை (திருவருள்.3) என அது இப் பிரபஞ்சத்துக்கு உரியதல்ல என்பதும்,
- தெரியவரியதாய்க் கலந்த எந்தப் பொருள் அந்தப் பொருள் (பொருள்.3) என அது எங்கும் நிறைந்தமையும்.
- பொருளாகக் கண்ட பொருள் வைக்கும் முதற்பொருளாகி (பொருள்.7)
- தன்னையன்றி ஒரு பொருளில் இல்லாத எப்பொருட்குந்தான் முதலாய் (மண்டல.2) என அனைத்திற்கும் மூலமாயினமையும்,
- வாக்குமன மணுகாத பூரணப் பொருள் (தேசோ.10)
- பரிபூரணமாம் பொருள் (ஆகார.28)
- பொருளே நின் பூரணம் மேலிட்ட காலம் (கல்லா.12) என பூரணவியல்பும்,
- வடிவில்லாச் சுத்தவான் பொருளே (பன்மாலை.3)
- மறை முடியிருந்த வான் பொருளே (ஆசை.37)
- இருள்தீர விளங்கு பொருளியாதந்தப் பொருளினை யாம் இறைஞ்சி நிற்பாம் (பொருள்.7) என அதுவே ஒளிப்பிடம்பாயினமையும்,
- தீதில் பரமாம் பொருளை (பொருள்.5)
- உன்னைப் போன்ற நற் பரம்பொருள் இல்லை (ஆசை.19)
- சாந்தப்பதப் பரம்பொருளே (ஆசை.21)
- மனக்கோதகற்றும் பரம்பொருளே (பாயந் 167)

- விளங்கு பரம் பொருளே (கல்லா.25) என அதன் பரத் தொடர்பும் தன்மையும்.
- அருமறையின் சிரப்பொருளாய் (பொருள்.8)
- சுருதி முடிவான பொருளே (தேசோ.11) என அது வேத முடிவாயினமையும்.
- வான்பொருளாகி யெங்கு நீயிருப்பு (ஆசை.38)
- சுகவான் பொருளே (பாயப்.43)
- உள்ளவர் பொருட்டோற்கவோ வந்தேனான் (அனந்தக.25)
- எனவதன் உயர்வும். போக்கு வரவற்ற பொருளே (சின்மயா.4.எந்.பொரு.4)
- மன்னைப் பொருளன் (தன்னை.1) எனவதன் நிலைபேறும்.
- சூழ்வெளிப்பொருள் (வம்பனேன். 6)
- வெட்ட வெளிப் பொருள் (எந்.அருளி.9)
- எனவதன் தன்மையும். தனிவளர் பொருளே (வம்பனேன்.10)
- ஒரு தனிப் பொருள் அளவை (ஆசை.18)
- நீக்கமின்றித் தங்கும் தனிப்பொருள். (எந். பொருளி.13) என அதன் ஒப்பற்ற நிலையும்.
- உயிர்த்திரளை விழுப்பொருளே (ஆகார.7)
- அடியவர்கள் களிக்க நின்றடும் விழுப்பொருளே (பாயப்.54) என விழுமையும்.
- சமயாதீதப் பழம் பொருள் (காடுங்.1)
- பழம் பொருளே (எந்.அன்பு.9)
- பந்தத் துயரற்றவர்க்கு எளிய பரமானந்த பரம் பொருளே (தன்னை.7) எனப் பழமையும்.
- பேரின்பப் பொருளே (தன்னையொரு.3)
- பேரின்பமதாய்ச் செறியும் பொருள் நீ (தன்னை.4)
- ஆனந்தமாயிருந்த பொருளோடு (ஏசற்ற.9) என இன்ப நிலையும்.
- குன்றாப் பொருள் (அகவல்.4) எனப் பெருமையும்.

அவரது முதல் பாடலே "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்." என்று தொடங்குகிறது.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.




# 2.தெய்வம் ஒன்றே

ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேண்டும்" என்ற அகத்தியரின் வழியும், "ஒன்றென்றிரு தெய்வம்" என்ற பட்டினத்தார் வழியும், தெய்வம் உண்டு, அதிலும் ஒரே தெய்வம்தான் என்று வேதாத்திரியம் சொல்கிறது. இதனை

"எண்ணிறந்த மதங்கள் உண்டு மனிதருக்கு

எனினும் தெய்வம் என்ப தொன்றே யாகும்” (வேதாத்திரியம்)

Commented [NK1]:

அத்வைதம் என்பது சமஸ்கிருத சொல்லாகும்.( இரண்டற்ற நிலை என்று பொருள் தருகிறது.

இது இந்து தத்துவத்தில் இறைவனின் தன்மை பற்றிய ஒரு கொள்கை ஆகும்.

சீவன் (ஜீவாத்மா) என்பதும் இறைவன் (பிரம்மம்|பரமாத்மா) என்பதும் ஒன்றுதான்; வேறல்ல என்றும் சகல உயிரினங்களுக்குள்ளும் ஆத்மாவாக விளங்குகின்றது என்றும் இத்தத்துவம் கூறுகிறது.

"அத்வைதம் என்ற அந்நியச்சொல் கண்டு உணர்ந்து
சுத்த சிவத்தைத் தொடரும் நாள் எந்நாளோ? (தாபா.1302)

- இரண்டற்றது என்னும் வேதாந்த நெறிக்கு அந்நியமான ஒரு சொல்லின் பொருளை ஆராயந்து உணர்ந்து,
- தூய சிவத்தை பின் தொடர்ந்து பற்றும நாள், எந்நாளோ?

"ஒன்று இரண்டும் இல்லதுவாய் ஒன்றுஇரண்டும் உள்ளதுவாய்
நின்ற சமத்துநிலை நேர் பெறுவது எந்நாளோ? (தா.பா.1285) சீவன்

- ஒன்று, சிவன் ஒன்று ஆக இரண்டு என்றும். சீவனும் சிவனும் கலக்கும்போது சீவன் வேறாகவும், சிவன் வேறாகவும் நில்லாது,
- இரண்டற்று நிற்கும் என்றும்.
- அதனாலேயே அது ஒன்று ஆகாது என்றும்.
- சாமர்த்தியமாய்ப் புரிந்து கொள்வது எப்பொழுது ? எனவும் தாயுமானவர் கேட்கிறார்.

என்னையும் தன்னையும் வேறா உள்ளத்து
எண்ணாத வண்ணம் இரண்டு அற நிற்கச்
சொன்னது மோஒரு சொல்லே அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தை என் சொல்வேன் சங்கர (தா.பா.1436)

என்று இறைவனுடன் இரண்டறக் கலந்த பெருநிலையை விவரிக்கிறார் தாயுமானவர்.

## அத்வைதம் த்வைதம் -வேதாத்திரியம்

நீங்கள் கடையில் தேங்காய் வாங்குகிறீர்கள்; தேங்காய்க்குள் தண்ணீர் இருக்கிறது. நீங்கள் ஒரு எலுமிச்சம் பழம் வாங்குகிறீர்கள்; அதற்குள்ளும் நீர் இருக்கிறது, அதை ஜூஸ் (▯▯▯▯▯) என்கிறோம்.

இதேபோல எந்த இடத்தில் நீர் இருந்தாலும் அது நமக்குத் தேவைப்படுவதாகவே உள்ளது. சில இலைகளில் கூட நீர் இருக்கிறது; கசக்கிப் பிழிந்து அதை உபயோகப்படுத்துகிறோம்.

ஒவ்வொன்றிலிருந்து கிடைக்கும் நீருக்கும், தனித்தனிப் பெயர்களைக் கொடுத்து அவற்றை உபயோகப்படுத்துகிறோம்.

இதே நீரின் மூலம் என்ன? தேங்காய்க்குள் எப்படி தண்ணீர் வந்தது? நிலத்திலிருந்து தானே?

அப்படியானால் நிலத்திற்கு, பூமிக்கு எப்படி தண்ணீர் வந்தது? மழையிலிருந்து வந்தது, மழை எப்படி நீரைப் பெற்றது. கடலிலிருந்து, கடல்நீர் ஆவியாகி மேகமாக மாறுவதால் வந்தது.

இதே தத்துவம் தான் எலுமிச்சம் பழத்திலுள்ள நீருக்கும், இலைகளில் உள்ள நீருக்கும் ஏற்றது.

தேங்காய்க்குள்ளும் எலுமிச்சம் பழத்திற்குள்ளும், இலைகளுக்குள்ளும், எல்லாவற்றிலும் கடல் நீரைத் தானே காண்கிறோம்? இதுதான் அத்வைதம்.

பரிணாம வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களையெல்லாம் மறந்து விடாமல் மூலத்தைப் பார்க்க வேண்டும்.

"மனிதனே நீயார்? சொல்!

மனமென்பதெது ? கூறு!
மயங்கினாயேல் நீ மதிக்கும்
மற்றவெலாம் சரியாகா!"

கடவுள்

"உருவங்கள் கோடான கோடியாய், அவை
யுள்ளும் புறமும் அரூபமாய்,
ஊடுருவி நிறைந்தியங்கும் ஒருசக்தி,
உயிராகும், இயற்கையாகும் கடவுளாகும்."

அத்வைதம், துவைதம்

"கற்கண்டு என்ற ஒரு வார்த்தை சொன்னால்
கரும்பு ரசப்பக்குவத்தின் சரித்திரமாகும்
கற்கண்டைக் கரும்பு ரசம் என்றால் அஃது
கருத்துக்கு அத்துவித தத்துவம்போல்
கற்கண்டு கரும்புரசம் வேறு வேறாய்க்
காட்டுவது துவித நிலை விளக்கம் ஒக்கும்
கற்கண்டு கரும்புரசம் இரண்டும் போலாம்
கடவுளும் மற்றனைத்துருவும் கருத்துணர்ந்தால்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.

# 3.இறைவழிபாடு

அன்பும் கருணையும் கொண்ட இறைநிலை – அருள்வெளியை – இறைவனை, உயிர்கள் தங்கள் பக்குவ நிலைகளுக்கு ஏற்பத், தம்முள் பதித்து வைத்துள்ளன.

தம்முள் பதிந்த இறை உருவங்களில் மனத்தைப் பதித்த உயிர்கள், அந்த உருவங்களோடு ஒன்றி விடுகின்றன.  இதனால் உயிர்கள் அமைதியும் இன்பமும் பெறுகின்றன.

"வழிபாடு" என்ற சொல்லுக்கு, "வழியில் செல்லுக, பின்பற்றுக, வணக்கம், பஜனை, சமயக்கோட்பாடு" முதலான பல பொருட்களைக் கழகத் தமிழகராதி தருகின்றது.

"வழிபாடு" என்பது "வழிபாடுதல்" என்னும் பொருளுக்குரிய சொல்லாகும்.  "வழிபடு" என்னும் தொழிற்பெயர், பெயர்ச் சொல்லாக மாறும்போது ஈற்றயல் நீண்டு வழிபாடு என்றாகின்றது.

"பண்படு" என்னும் சொல் "பண்பாடு" என்றாகியது போல இச்சொல்லும் உள்ளது.

"வழி" என்பதற்கு "நெறி" என்றும் "படு" என்பதற்குச் "செல்லுதல்", "பொருந்துதல்", என்றும் பொருள் கற்பிக்கப்பட்டு இறையடியவர்களும் ஞானிகளும் அறிஞர்களும் காட்டியுள்ள நெறியில் செல்லுக என்று அறிவுறுத்தும் பாங்கில் இச்சொல் இன்று ஆளப்பட்டு வருவதைக் காண்கின்றோம்.

இறைவனை, வழிபாட்டுச் சொற்களைக் கொண்டு பாமாலை தொடுத்து வழிபடுவதை, நாம் வழிபாடு எனக் கொள்ளலாம்.

"கிரியையால் ஞானம் தன்னால் கிளர்சிவ பத்தி, பூசை
தரிசனம் சைவலிங்க தாபனம் செய்தல் ஈசற்கு
உரிய மெய்ன்பர் பூசை உருத்திர சின்னம் தாங்கல்
அரியதே சிவன்பாற் பத்தி அனைத்தையும் தெரியலாகும்"(பாடல்4)

மூன்று வழிபாட்டு நெறிகளை பரஞ்சோதி முனிவர் தம்முடைய திருவியைாடல் புராணத்தில் வேதத்திற்குப் பொருளருளிச் செய்த படலத்தில் விளக்குகின்றார்.

- திருநாவுக்கரசர் தொண்டு நெறியிலும்,

- திருஞானசம்மந்தர் நன் மகன்மை நெறியிலும்,
- சுந்தரர் தோழமை நெறியிலும்,
- மாணிக்கவசகர் ஞானநெறியிலும்

நின்று இறைவனை வணங்கி வழிபட்டு வந்துள்ளனர்.

திருவாசகத்தில் நான்கு வழிபாட்டு முறைகளை மாணிக்கவாசகர் சொல்கிறார்.

1. பேரின்பத்தில் திளைத்தல்
2. அகங்குழைந்து வழிபடுதல்,
3. இறையருளோடு கலத்தில்
4 .இறையன்பில் உறுதி

என வகைப்படுத்தி உள்ளார்.

இறையருளை வேண்டி உள்ளம் உருக வழிபாடுகிறார் தாயுமானவர்.

அங்கை கொடுமலர் தூவி அங்கமது புளகிப்ப
அன்பினால் உருகி விழிநீர்
ஆறாக, ஆராத முக்தியினது ஆவேச
ஆசைக் கடற்குள் மூழ்கிச்

சங்கர! சுயம்புவே! சம்புவே! எனவும் மொழி
தழுதழுத்திட வணங்கும்
சன்மார்க்க நெறி இலாத் துன்மார்க்கனேனையும்
தண் அருள் கொடுத்து ஆள்வையோ?

துங்கமிகு பக்குவச் சனகன் முதல் முனிவோர்கள்
தொழுது அருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியை ஒரு சொல்லால் உணர்த்தியே
சொரூப அநுபூதி காட்டிச்

செங்கமல பீடம் மேல் கல்ஆல் அடிக்குள் வளர்
சித்தாந்த முக்தி முதலே!
சிரகிரி விளங்கவரு தட்சிணாமூர்த்தியே!
சின்மயானந்த குருவே! (தா.பா.26.சின்மயானந்தகுரு.1)

எப்படி, உடலானது மகிழ்ச்சியினால் அசைய, அன்பினால் மனம் உருகி, கண்களில் நீரானது ஆறுபோல் பெருக, முத்தியின் மீதுகொண்ட வெறியுடன் கூடிய ஆசையாகிய கடலுக்குள் மூழ்க, சங்கரா! சுயம்புவே! சம்புவே! என மொழி குளறப் போற்றி வணங்கும் ஒழுக்க நெறியில் நில்லாது, தவறான நெறியில் நிற்கும் என்னையும், தேவரீரது குளிந்த திருவருளைத்தந்து ஆட்கொள்வீரோ?

## வேதாத்திரியம் தரும் இறைவழிபாடு

இயற்கையின் இருப்பை உணர்தல், முயற்சியை நல்ல முறையிலே, வெற்றியான வழியிலே செலுத்துதல், உயிர்களுக்குத் தீமை இல்லாத முறையில் ஆக்கத் துறையில் வாழ்வை செலுத்திக் கொள்வது என்பது "அறம்".

மற்றொன்றான அகம் நோக்கிச் செய்யும் இறை வழிபாட்டைத்தான் "தவம்" ([illegible]) என்று சொல்கின்றோம்.

எந்த மெய்ப்பொருளை, எந்த உண்மையை உணர்ந்து எந்த இயற்கை வழிபாட்டை உணர்ந்து அதை மதித்து நடக்கின்றோமோ அதை நினைவில் வைத்துக் கொள்கின்றோமோ அதை எப்பொழுதும் விழிப்போடு பார்த்துக் கொள்கின்றோமோ அது தான் "இறைவழிபாடு".

இயற்கை என்பது மனிதன் அறிவுக்கும் வாழ்வுக்கும் ஏற்றமளிக்கும் ஒரு மாபெரும் ஆற்றலுடைய தத்துவம் இது.

1. இருப்பு நிலையான ஆதியில் இறைவெளியாக,
2. இயக்க மூலமான ஆற்றலில் விண்துகளாக,

3. விண்துகள்கள் கூடிய கூட்டு இயக்கத்தில் பஞ்சபூதங்களும் அவை கூடிய அண்டங்கள் பலவாகவும்,
4. இயற்கையின் விளைவுகளை உணரும் ரசிக்கும் நிலையில்
5. ஓரறிவு தாவரம் முதல் ஆறறிவு மனிதன் வரையிலும் நான்கு நிலைகளிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இயற்கையின் பெருமையை, சிறப்புகளை, விளைவுகளை உணர்ந்து கொள்ள மனிதன் எடுக்கும் முயற்சியில் மன அலைச்சுழல் (□□□□ □□□□□□□□□) விரைவைக் குறைத்து, அலைகள் நிலையாக, அதுவே அறிவாக, அதையே தானாக, அவ்வறிவாக இருக்கும் பேராற்றலே எல்லாம் வல்ல இறைவெளியாக உணர்ந்து முழுமை பெறும் முயற்சிதான் "தவம்" (குண்டலினி யோகம் – □□□□□□□□□□ □□□□□□□□□ □□□□) ஆகும்.

தவத்தால் கண்ட உண்மைகளை மறவாமல் வாழ்வில் ஒழுகி தனக்கும் பிறர்க்கும் ஆக்கமே தரும் வழியில் ஒத்தும் உதவியும் வாழும் நெறியே "அறம்" ஆகும்.

"தவமும் அறமும்" இறைநிலையுணர்ந்து அவ்வழியே வாழத் திறமையளிப்பதால் இவையே "இறைவழிபாடு" எனப்படுகின்றது.

மனிதனை இன்ப துன்பச் சுழலால் பாதிக்கப்படாத அமைதி நிலைக்கு "குண்டலினி யோகம்" உயர்த்துகிறது.
உணர்வோம் வளமோடு வாழ்வோம்.

## முழுமையும் அமைதியும்

அறிவுஆறாம் நிலையை எய்த பின்னர்,
அதுமுழுமை பெற்றுத் தனையறியும் மட்டும்
அறிவுக்கு அமைதிகிட்டா; அவ்வப்போது,
அதுதேவை, பழக்கம், சூழ்நிலைகட் கொப்ப
அறிவேதான் காம முதல் ஆறுகுணங்கள்
ஆகி, விளைவாய் இன்பதுன்பம் துய்த்து,
அறிவுதன் மூலநிலை நோக்கி நிற்கும்.,
அதன்பிறகே முழுமைபெறும். அமைதி உண்டாம். (ஞாக.பா.1229)

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.

## 4.அறநெறியே இறைவழிபாடு

உட்கார்ந்த இடத்தில் இருந்தே இறைவனை அழைக்கும் அளவுக்கு ஆத்ம பலம் சித்தர்களுக்கு இருந்தது.

ஆனால் இதுபோன்ற பலம் மனிதர்களுக்கு வேண்டும். இதற்கான பயிற்சி, முயற்சி, சாதனை செய்வது, தவம் செய்வது போன்ற விளக்கங்களை எ லலா ம் தாயமானவர் பாடல்களில் நாம் காணலாம்.

“நமக்கு அப்பால் ஒரு சக்தி இருக்கிறது. அது தான் இயற்கை என்று அனைவரும் ஒத்துக் கொள்வார்கள்.

அதை மதவாதிகள் கடவுள் என்று பெயர் வைத்துள்ளார்கள். அதே போல் இந்தப் பிரபஞ்சத்தை எடுத்துக் கொண்டால் இந்த உலகம் ஒரு நாளைக்கு 25 ஆயிரம் மைல் தன்னைத்தானே ஒரு சுற்று சுற்றி வருகிறது.

சூரியனைச் சுற்றி வரும் பாதையிலே ஒரு நாளைக்குப் பதினைந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் மைல் ஓடுகிறது.

இதில் ஏதாவது தாமதம் இருக்குமா? இல்லை தடம் மாறுகிறதா? அவ்வளவு நேர் நிர்வாகமாக சிறிதும் பிறழாமல் எந்தப் பெரிய ஆற்றல் (□□□□□□□□□□□□□□) நிர்வாகம் நடத்துகிறது என்று பார்த்தால், அத்தகைய பெரிய நிர்வாக ஆற்றல் பிரபஞ்சத்தில் எல்லாம் வல்ல இறைவெளியின் அழுத்தம் என்ற உந்து ஆற்றலால் தான் நடக்கிறது.

அதே போல் என் உள்ளத்திலே உடலிலே நடக்கிறதும் அதே தான்.

உடலிலும் சரி பிரபஞ்சத்திலும் சரி அணுவிலும் சரி அணுவைச் சுற்றிலும் சரி எங்கும் நிறைந்த ஆற்றலாக இருப்பது அந்த எல்லாம் வல்ல இறைவெளி ஒன்றுதான்.

எனவே அந்த அழுத்தமும் அதன் அறிவும் ஒன்றிணைந்த ஆற்றல்தான் நாம் எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச் செயலுக்குத் தக்க விளைவுகளைத் தந்து கொண்டே இருக்கின்றது.

கையைத் தட்டினால் ஒலி வருகிறது. அதே போன்று அதிகமாக சாப்பிட்டால் உடனே அஜீரணம். அவ்வாறு எந்தச் செயல் செய்தாலும் தவறாகச் செய்தால் அது தவறு என்று உணர்ந்த உடனே துன்பம் உண்டாகிறது.

சரியாகச் செய்தால் நாம் வாழ்க்கையைச் சீராக வாழ்ந்து கொண்டு வருகிறோம் என்று பொருள். தவறு செய்யாது இருக்க வேண்டும்.

தவறு செய்தால் உடனே தண்டனை இருக்கிறது என்பதுதான் இறை ஆற்றல் உணர்த்தும் நீதி. அது கூர்தலறம் ([illegible]) இதைத் தெரிந்து கொள்ள இறையுணர்வு வேண்டும்.

தெரிந்து கொண்ட பிறகு மக்களோடு ஒற்றுமையாக வாழ்வதற்கு அறநெறி வேண்டும். அறநெறிதான் உண்மையில் இறைவழிபாடு.”

நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம், அன்பே மஞ்சனநீர்,
பூசை கொள்ள வாராய் பராபரமே”

என்று தாயுமானவர் பாடியுள்ளார்.

எனது இதயமே கோயில், உன்னைப் (இறைவன்) பற்றிய நினைவுகளே மலர்கள், உன் மீதான அன்பே மஞ்சனநீர் (அபிஷேகத்திற்கான பால், தேன்).

எனவே, இதுபோன்ற பூஜையே என்னால் செய்ய முடியும்; உடனே வருவாய் என் இறைவா என்று வழிபடுகிறார்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.


வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
கருணாகரக கடவுள்
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.


வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
மௌனகுரு
வணக்கம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.


வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
சின்மயானந்தகுரு...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.


குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
எங்கும் நிறைகின்ற பொருள்
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.

# 5. உடலோம்பல் இறைவழிபாடு

இவ்வளவு சாப்பிட்டால் போதும், நன்கு ஜீரணமாகும். உடல் நன்றாக இருக்கும் என்று தெரிந்து அளவோடும், முறையோடும் சாப்பிடுவோம்.

ஆனால், சுவையாக இருக்கிறது என்று அதிகமாகச் சாப்பிட்டால் அதை ஜீரணிப்பதற்கு வேண்டிய அதிகப்படியான அமிலம் எங்கிருந்து சுரக்கும்?

பற்றாக் குறையின் காரணமாக உணவு செரிக்காமல் தேங்கிப் போவதால் புளித்துப் போகிறது. அது வயிற்றில் புண்ணை உண்டாக்கித் துன்பம் தருகிறது.

மனிதன் அறியாமையால் செய்யும் தவறுகள் தான் துன்பமாக விளைகிறது. இறையின் ஆற்றலால் எல்லாம் சரியாக நடக்கிறது.

ஆனால், நாம் ஆசையினால், மறதியினால், இறைவனின் செயலை மறந்ததினால் அதிகமாகச் சாப்பிட்டோம். இறைவன் செயலில் குறுக்கிட்டோம். உறுப்புக் கெட்டுவிட்டது. அதன் விளைவாகத் துன்பத்தை அனுபவிக்கிறோம்.

இறையருள் எல்லாச் செயலிலும் கலந்து சரியான பலனைத் தந்து கொண்டே இருக்கிறது.

நாம் அதைத் தடுத்தால் அந்தத் தடைக்குத் தகுந்தவாறு துன்பம் வரும். இதைத் தெரிந்து கொண்டால் இறைவனுக்குப் பயந்து நடக்க வேண்டுமென்று முன்னோர்கள் சொன்னது தவறா?

தவறாகச் செய்தால் துன்பந்தான் வரும். சரியாகச் செய்தால் இன்பமே நிலைக்கும். இந்த உண்மையைத் தெரிந்து கொள்கிறபோது இறையுணர்வு வருகிறது.

அதற்கு ஏற்றவாறு இந்த உடலுக்கு உணவு, ஓய்வு, உடலுறவு, எண்ணம், உழைப்பு இந்த ஐந்தையும் அலட்சியம் செய்யாமல்,

அதிகமாக அனுபவிக்காமல், முரணாக அனுபவிக்காமல் நாம் பார்த்துக் கொள்வோம்.

உடல் நலமாக இருக்கும். மனமும் அமைதியாக இருக்கும். அப்படி அறிவின் தெளிவோடு உடலை நலமாக வைத்துக் கொள்வதும் இறை வழிபாடு தானே? என்கிறது வேதாத்திரியம்

பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே!

சிவபெருமான் எவர் உள்ளத்தை ஏற்ற இடமாகத் தேர்வு செய்கிறார் தெரியுமா? அதையும் அந்த தேவாரத்தின் முதல் இரண்டு அடிகள் குறிப்பிடுகின்றது.

'நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்!

உள்ளார்ந்த அன்பும், இதயம் கலந்த ஈடுபாட்டையுமே இறைவன் விரும்புகின்றான்.

அணுவளவும் அன்புணர்ச்சி இல்லாமல் தன் எலும்புகளையே விறகுகளாக்கி தன் சதைகளையே அறுத்து ஒருவர் இறைவனுக்குப் படைத்தாலும் அவரால் திருவருளைப் பெற இயலாது என்கின்றார், திருமூலர்.

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனவில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகங் குழைவார்க்கு அன்றி
என் பொன் மணியினை எய்த ஒண்ணாதே!

திருமந்திரத்தின் மேற்கண்ட பாடல் ஆடம்பரமாகச் செய்யப்படும் வேள்விகள், சிற்றுயிர்களைப் பலிகொடுத்தல் போன்ற செயல்களால் ஒரு போதும் இறையருளைப்பெற இயலாது என்பதை உணர்த்துகின்றது.

'இறைவன் விரும்பும் மலர் எது'? என்பதை சொற்சுவையும், பொருட் சுவையும் மிளிர 'யாழ்நூல்' இயற்றிய இலங்கை விபுலானந்த அடிகள் அதி அற்புதமாகப் பாடல் ஒன்றில் பகர்கின்றார்.

வினா - விடை வடிவில் அமைந்துள்ள இலக்கியத்தேன் சொட்டும் அப்பாடலை அனுபவிப்போமா?

'வெள்ளை நிற மல்லிகையோ?
வேறெந்த மாமலரோ?
வள்ளல் பிரானார்க்கு
வாய்த்த மலர் எதுவோ?
வெள்ளை நிறப் பூவும் அல்ல!
வேறெந்த மலரும் அல்ல!
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது!
காப்பவிழந்த தாமரையோ!
கழுநீர் மலர்த் தொடையோ!
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு
வாய்த்த மலர் எதுவோ?
காப்பவிழ்ந்த மலரும் அல்ல!
கழுநீர்த் தொடையும் அல்ல!
கூப்பியகைக் காந்தளடி
கோமகனார் வேண்டுவது!'

பழவகைகளாலும், பலவகையான மலர்மாலைகளாலும் சுவை மிகுந்த நிவேதனங்களாலும் நாம் இறைவனை ஆராதிப்பதும்

**அர்ச்சனை செய்வதுமே ஒருவகையில் அர்த்தமில்லாத ஒன்று தானோ என்று சிந்திக்கிறார் பக்தர் ஒருவர்.**

காஞ்சி மகா முனிவர் தம் அருளுரையில்இது பற்றி கூறுவதைக் காண்போம். 'ஈஸ்வரா! நான் உனக்கு உபசாரம் செய்வதாக நினைத்து பூஜை செய்தாலும் உண்மையில் அபசாரம் அல்லவா செய்வதாகத் தோன்றுகிறது.

மூவுலகும் விரிந்து பரந்த உன் பாத கமலங்களை நீரூற்றித் துதிக்க என் சின்னஞ்சிறு பாத்திரத்தின் தண்ணீர் போதுமா?

விண்ணும், மண்ணும் பரந்திருக்கும் உன் திருமேனியை அலங்கரிக்க நான் போர்த்தும் சிறிய ஆடை யால் ஆ மோ? உன்னை நமஸ்காரம் செய்தால் என் காலை நீ இல்லாத பக்கமாக என்னால் நீட்ட முடியவில்லையே!

சரி! உன்னை பிராத்திக்கலாம் என நினைத்தால் என் மன ஆசையை அறியாதவனாகவா நீ இருக்கின்றாய். எல்லாம் ஆன நீயேதான் நானாகவும் இருக்கின்றாய் என்று தெரிந்து கொண்டு நான் வாழ்வதற்கு நீதான் அருள் புரிய வேண்டும். தாயுமானவரின் தமிழ் இதை அற்புதமாக எடுத்துரைக்கின்றது.

பண்ணேன் உனக்கான பூசை ஒரு
வடிவிலே
பாவித்து இறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்
பனிமலர் எடுக்க மனமும்
நண்ணேன் அலாமல் இரு கைதான் குவிக்க எனில்
நாணும் என் உளம் நிற்றி நீ
நான் கும்பிடும் போது அரைக்கும்பி டாதலால்
நான்பூசை செய்யல் முறையோ

மேலும் இறைவனுக்கு உகந்த வழிபாடு. எது என்பதையும் சொல்கின்றார் தாயுமானவர்.

நெஞ்சகமே கோயில்! நினைவே சுகந்தம்! அன்பே
மஞ்சன நீர்! பூசை கொள்ளவாராய்! பராபரமே!

உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம் நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம் என்ற தாயுமானவர் பாட்டுக்கு முன்னோடி....இந்த வரிகள்!

வாக்கிற்கு அருணகிரியார் வடிவேலனுக்கு ஒரு வினோதனமான மாலையைச் சூட்ட விரும்பி அம்மாலையை எதை எதைக் கொண்டு அமைக்கிறார் என்று பார்க்கலாமா?திருப்புகழில் அந்த செந்தமிழ் மந்திரமாலையின் செய்முறை விளக்கத்தை விவரிக்கின்றார்.

'ஆறுமுகப் பெருமானே! என்றும் உங்களையே எண்ணி மகிழும் என் உள்ளமாகிய பூவே அந்த உன் ன மாலையின் குஞ்சமாக அமைய வேண்டும். தொடுக்கும் கயிறு என்ன தெரியுமா?

தூய அன்பு நாரினால் அது அமைய வேண்டும். தாங்கள் வெற்றி வடிவேலினால் ஓங்காரத்தை எழுதிய என் நாவில் ஒலிக்கும் ஓசையால் அம்மாலை ஒளிவிட வேண்டும் ஞானமே நறுமணமாக, வாசனையாக அம்மாலையில் வீச வேண்டும். அறிவாகிய வண்டே அந்த மாலையைச் சுற்ற வேண்டும். இதுவே என் விருப்பம். அதை நிறைவேற்றுவீர்' என வேண்டுகிறார்.

ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மானபூ வைத்து நடுவேயன்
பானநூ லிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி யொருஞான

வாசம்வீ சிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தியளிபாட
மாத்ருகா புஷ்ப மாலைகோ லப்ர
வாளபா தத்தி லணிவேனோ

மேற்கண்ட முறையில் வித்தியாசமாக, வித்தகமாக அமைந்த அற்புதச் சொற்பத அரிய மாலையை தன் பன்னிரண்டு தோள்களிலும் அணிந்து தோற்றம் தருகிறான், வேலவன் என்று பெருமிதம் பொங்கப் பேசுகின்றார் அவர்.

'மல்லேபுரி பன்னிருவாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே!

மேற்கண்ட விதம் கந்தர்அனு பூதியில் பாடும் அருணகிரியார் தித்திக்கும் திருப்பரங்குன்றம் திருப்புகழ் ஒன்றிலும் அதைப் பதிவு செய்கின்றார்.

இருக்கு மந்திர மெழுவகை முனிபெற
உரைத்த சம்ப்ரம சரவண பவகுக
இதத்த இங்கித மிலகிய அறுமுக எழில்வேளென்
றிலக்க ணங்களு மியலிசை களுமிக
விரிக்குமம்பல மதுரித கவிதனை
யியற்று செந்தமிழ் விதமொடு புயமிசை புனைவோனே!

'நாவுக்கரசர்' என ஆண்டவனாலேயே பட்டம் சூட்டிப் பாராட்டு பெற்றவர் அப்பர். அவர் தேவாரத்தில் தெரிவிக்கின்றார்.

காயமே கோயிலாகக்
கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக

மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா
நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப்
போற்றவிக் காட்டினோமே!

அருளாளர்கள் காட்டிய வழியில் நாம் அன்றாடம் ஆராதனை மேற்கொண்டால் இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். வாழ்க வளமுடன்.

## 6. நித்ய பூசை செய்வது இறைவழிவாடா?

நம்மில் நிறைய பேருக்கு இறைவழிபாடு செய்வதில், அதிக ஆர்வம் இருக்கும்.

ஆனால், சிலரால் தொடர்ந்து இறைவழிபாட்டை செய்யவே முடியாது. வீட்டில் தினந்தோறும் பூஜை அறையில் இறைவனை வழிபட வேண்டும். பூஜை செய்ய வேண்டும், என்று நினைப்பார்கள்!

ஆனால் ஏதோ ஒரு விதத்தில் தடங்கள் ஏற்பட்டு கொண்டே இருக்கும். வீட்டில் தீபம் கூட ஏற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

இந்த தடங்கள் மனதில் தேங்கி, மன அழுத்தத்தை உண்டாக்குவதற்கும் வாய்ப்பு உள்ளது.

'நம்மால் ஏன் இறைவழிபாட்டை செய்ய முடியவில்லை? ஏதேனும் தோஷம் இருக்குமோ? அல்லது ஏதாவது தெய்வ குத்தம் இருக்குமோ?' என்ற பயம் உள்மனதில் கட்டாயம் வரும்.

இப்படிப்பட்டவர்கள் தாயுமானவரைப் போல் மனதால் பூஜை செய்யலாம். வேதாத்திரியம் அகத்தவத்தால் இறைவனை வழிபடலாமே?

உள்ளுறையில் என்னாவி நைவேத்யம் ப்ராணன் ஓங்குமதி தூபதீபம்
ஒருகாலமன்றிது சதாகால பூசையாய் ஒப்புவித்தேன் பராபரமே

தாயுமானவர்

- சதா சர்வ காலமும் பூசை நடந்து கொண்டே இருக்க என்ன செய்ய வேண்டும்?
- சதாசர்வ காலமும் பூசை செய்வது இயலுகிற காரியமா? தூங்குவதற்கு நேரம் வேண்டாமா?
- தூக்கத்தில் கனவு வரும், கனவில் பூசை செய்வேன் என்று சொல்ல முடியுமா?
- உறக்கம் என்பது தன்னை மறந்த நிலை. அதில் எப்படி பூசை செய்ய முடியும்?

இயலும் என்கிறார் தாயுமானவர்..

அதற்கு என்ன செய்ய வேண்டும்?

- பூசை என்பது இச்சை செயலாக இன்றி அனிச்சை செயலாக வேண்டும்.
- நம் உடலில் சில காரியங்கள் மட்டும் நிற்பதே இல்லை.. இதயம் துடிப்பது. மூச்சு விடுவது..
- உள்ளுறையில்... கோவிலில் கருவறை போல இறைவன் இருக்கும் கருவறை ஆக மனம் மாற வேண்டும்.
- அவனுக்கு நாம் இழுத்து விடும் மூச்சே தூப தீபம் ஆக வேண்டும். ஆக மூச்சைச் சீராக்க வேண்டும்.

ஓங்கும் அதி தூப தீபம். மூச்சுதான் தூப தீபமும். அனைத்து மூச்சும் ஒரே போல் இருப்பதில்லை, சில சமயங்கள் ஆழ்ந்த மூச்சும், சில சமயம் சீரான மூச்சும் சில சமயம் மெல்லிய சுவாசமும் இருக்கும்.

ஒவ்வொரு மூச்சும் ஒவ்வொரு வகை ஆராதனை.. இறை ஆராதனையாக சுவாசம் மாறினால்.. அதை எவ்வளவு சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று புரிகிறதல்லவா?

தூப தீபம் சரி. நைவேத்யம் என்ன?

படியளக்கிற பெருமானுக்கு அளந்தா கொடுக்கமுடியும். என்ன கொடுத்தாலும் அது அவன் கொடுத்ததே அல்லவா? அவன் கொடுத்ததில் உயர்ந்த ஒன்றை அவனுக்கே படைத்தல் வேண்டுமல்லவா?

அப்படிப்பட்ட ஒன்று நமது உயிர் மாத்திரமே.. நம் உயிரையே அவனுக்கு நைவேத்யமாய் படைப்போம்.

அதன் பொருள் தற்கொலை செய்து கொள்ளுதல் அல்ல. நம் உயிர் அவனுடையதாகும் பொழுது அவன் சேவை மாத்திரமே நம் கடமை ஆகிவிடுகிறது.

இப்படி அவனது சேவை மட்டுமே நம் கடமையாகக் கருதி, அவனை மனதில் இருத்தி, முச்சுவிடுதலைக் கூட பூசையாகிக் கருதிச் செய்தோமானால் அதுதான் நித்திய / சத்திய பூசை.

அதற்காக தம்மை ஒப்புவிக்கிறார் தாயுமானவர் பெருமான்.

இப்படி ஒரு பூசை செய்ய வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

- மனம் வேறு எண்ணங்கள், வருத்தங்கள் ஆசைகள் இப்படி எதுவும் வந்து அடைந்து போகாமல் சுத்தமாக இருத்தல் வேண்டும்.
- சுற்றுப் புறத் தூய்மையும் வேண்டும்.

- நம்மையே நாம் அவனிடம் ஒப்புவித்து விட வேண்டும். வேண்டுதல் எதுவுமே இருக்கக் கூடாது...

மனம் என்ன சொல்கிறதோ அதை மறுபேச்சின்றி செய்தல் வேண்டும். இதுதான் இறைவனை நித்ய பூசை செய்யும் ஒரே வழி.

அகத்தவமே இறைவழிபாடு வேதாத்திரியம்

"தியானம்" என்ற வடமொழிச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் "அகத்தவம்" ஆகும். உயிர் மீது மனத்தைச் செலுத்தி அமைதி நிலைக்கு வந்து அவ்வமைதியின் மூலம் சிந்தனையைச் சிறப்பித்து அறிவை வளப்படுத்தி வாழ்வில் நலம் காணும் ஒரு சிறந்த உளப்பயிற்சி தான் அகத்தவம் அல்லது இறைவழிபாடு ஆகும்.

வாழ்க்கைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள மக்கள் அனைவருக்கும் அகத்தவம் இன்றியமையாத தேவையாகும்.

இதனை மாணவப் பருவத்திலேயே தொடங்குவது சாலச் சிறந்தது.

பிரபஞ்சம் எனும் பேரியக்க மண்டலத்தைக் களமாகக் கொண்டு உடல், உயிர், அறிவு என்ற மூன்றும் ஒன்றிணைந்து இயங்கும் ஒரு சிறப்பியக்க நிலையமே மனிதன்.

கருவமைப்பின் மூலம் வந்த முன்வினைப் பதிவுகளையும் அவற்றால் ஊக்குவிக்கப்பட்டு தற்போது நிகழும் பிறவியில் ஆற்றியுள்ள வினைப்பதிவுகளையும் அடக்கமாகப் பெற்று அவற்றின் வெளிப்பாடாகச் செயலாற்றி விளைவுகளைத் துய்த்து வாழும் உருவமே மனிதன்.

உலகிலுள்ள எல்லாத் தோற்றங்களிலும் எல்லா உயிர்களிலும் சிறந்த, மேலான இரு இயக்கநிலை மனித உருவம். எல்லாம் வல்ல இறைநிலையை முழுமையாக எடுத்துக் காட்டும், பிரதிபலிக்கும் கண்ணாடி மனிதனே.

"ஞானம் பெற தவப் பயிற்சி வேண்டும்.

தவத்தைப் பெற குருவை நாட வேண்டும்".

."மன அமைதியில் தான் அறிவு வளரும்".

."விடாமுயற்சியும், பகுத்தறிவும், கடின உழைப்பும்
உள்ளவனுக்கு அப்பாற்பட்டது எதுவுமில்லை".

## உபதேச மார்க்கம் :

"வாசியோக முறையொன்றும் இங்கு இல்லை
வாய்விட்டு உச்சரிக்கும் மந்திரமில்லை,
ஊசிமுனை வாசல் ஒன்றைத் திறந்து காட்டி
உன்னையே அங்குக் காவல் சில நாள் வைத்து
தேசிகனாய் அருள் ஒளிரும் பார்வை மூலம்,
தீட்சை மறுபடியும் ஈந்தழைத்துச் சென்று
மாசில்லா ஆதிநிலை யறியும் உச்சி
மன்றத்தில் அமர்த்திடுவேன் அமைதி காண்பீர்". (ஞாக.பா.1449)

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.


குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
பரிபூரணானந்தம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
பொருள்
வணக்கம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
ஆனந்தமானபரம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.
வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
தேஜோமயானந்தம்...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

## 7.இறைவழிபாடு எப்படி இருக்க வேண்டும்?

நம் பிரார்த்தனை என்னவாக இருக்க வேண்டும்?
கார் வாங்க பணம் வேண்டும், வீடு வாங்க வேண்டும், பதவி உயர்வு வேண்டும், ...- இப்படியா?

“ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசா திருக்க வேண்டும்.........”

இப்படியா? இப்படிக்கேட்போர் நம்மில் எத்தனை பேர்?

மாணிக்கவாசகர் கேட்கிறார்

வேண்டத் தக்கது அறிவோய் நீ,
வேண்ட முழுவதும் தருவோய் நீ,
வேண்டும் அயன், மால்க்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்!
வேண்டி நீ யாது அருள் செய்தாய்,
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்,
அதுவும் உன் தன் விருப்பு அன்றே!

*இறைவா, எனக்கு வேண்டியது எது என்று உனக்குதான் தெரியும். அதை நான் விரும்பிக் கேட்டால் அப்படியே தந்துவிடுகிறவன் நீ.*

*பிரமனும் திருமாலும் உன்னுடைய முழு உருவத்தைக் காண விரும்பினார்கள். ஆனால் நீ அவர்களுக்குக் காட்சி தரவில்லை.*

*எளியவனாகிய என்னை விரும்பி வந்து ஆட்கொண்டாய். நான் எதை விரும்பவேண்டும், எதைக் கேட்கவேண்டும் என்று நீ நினைக்கிறாயோ, சொல். நான் அதையே உன்னிடம் வேண்டுவேன்.*

*ம்ஹூம், அதெல்லாம் சரிப்படாது, நீயாக எதையாவது கேள் என்கிறாயா?*

*நீ இருக்கும்போது எனக்கு வேறு என்ன வேண்டும்? நான் எதைக் கேட்பேன்? அப்படியே நான் கேட்டாலும், அதுவும் உன்னுடைய விருப்பம்தானே?*

செயலுக்குத்தக்கபடி தான் இறைவன் கொடுப்பான் மகரிஷி

எந்தத் தேவையுமற்ற இறைவனிடம் நமது தேவைகளை முறையிடுவது தான் பிரார்த்தனை என்ற அடிப்படையைக் கூட அதிகமான மக்கள் விளங்காமல் உள்ளனர்.

தாங்களாகவே செய்து கொண்ட கற்சிலைகளிடமும், இறந்து விட்ட பெரியார்களின் சமாதிகளிலும் போய் பிரார்த்திக்கின்றனர்.

